**கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டம் - 2018**

---

கிழக்கு மாகாண நீர்வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பிற்கான முகவராக அறியப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வங்கிக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2010 மார்ச் 26 ஆம் திகதிய எஸ்எல் பி 98 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் உறுப்புரையின் 4.08(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

கிழக்கு மாகாண நீர்வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் விஞ்ஞாபனத்தின் பிரகாரம், முன்னைய நிதி அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களம் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் உள்ளூராட்சி அதிகாரப் பகுதிகளிற்குள் சிறி அல்லது கிராமிய நீர் வழங்கல் திட்டங்களை அமுலாக்குவதற்கு கிழக்கு மகாணசபை பொறுப்பாக உள்ளதுடன் நிர்மாணம் மற்றும் விரிவாக்கல் நீர் வழங்கல் வசதிகள் மூலம் பெரிய மட்ட நீர் வழங்கல் திட்டங்களை அமுலாக்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொறுப்பாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 7,703 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 6,054 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 6,239 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 4,904 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிற்காக ரூபா 6,527 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 5,130 மில்லியன் அம்பாறை மாவட்ட நீ்ர் வழங்கல் செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நோக்கத்திற்காக ரூபா 5,267 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 4,140 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 யூலையில் தொடங்கியிருந்ததுடன் 2013 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2018 சனவரி 23 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1. **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 656.60 மில்லியன் கூட்டுத் தொகையான பெறுமதி சேர் வரி இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. | இலங்கை அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்ட பங்களிப்பு பெறுகைகள் குறைத்துக் கூறப்பட்டது. | வழமைபோல், பெறுமதி சேர் வரி இலங்கை அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்ட நிதிகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டுளளது. | இலங்கை அரசாங்கத்திடம் இருந்தான மொத்த பங்களிப்புத் தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்டிருந்த ரூபா 91.45 மில்லியன் தொகையான வட்டிக் கட்டணங்கள் மற்றும் ரூபா 25.47 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் என்பன கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | நடைபெறும் வேலைகளின் பெறுமதி குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் தொகை அவற்றின் மிகுதிக் கொடுப்பனவுகளின் பொறுப்புக்களில் இருந்து பொதுத் திறைசேரியின் புத்தகங்களில் பதியப்பட்டன. | மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் கீழ் மொத்த கைதவிர்ப்புகள் வெளிப்படுத்துவதற்கு இயலக் கூடியவாறு உரிய கிரயங்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

| விபரம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்டது கிலோ மீற்றர் | அடையப்பட்டது கிலோ மீற்றர் | | | |
| கொண்டாவட்டுன முதல் கல்முனை வரை குழாய்கள் குழாயிடல் வேலைகள் | 28 | 25 | செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடையப்படவில்லை | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வேண்டுகையின் பிரகாரம், குழாய்கள் மீள பொருத்தப்பட்டமை காரணமாக 3 கிலோ மீற்றர் குறைப்பு ஏற்பட்டிருந்தது. | கடனாக பெறப்பட்ட நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு இயலக்கூடியவாறு முன்னரே கட்டங்களை இனங்காணப்பட வேண்டுமென வேண்டப்பட்டன. |
| மஹா ஓயா நீர் வழங்கல் திட்டம் | 80 | 48 | | கருததுரைகள் பெறப்படவில்லை. | |
| தெகியத்தகண்டிய நீர் வழங்கல் திட்டம் | 78 | 68 | | வடிவமைப்புக் கட்டத்திற்கு முன்னர், வேலைகளின் ஒரு பகுதி இன்னொரு ஒப்பந்தகாரர் ஊடாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. | |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| ரூபா 253.83 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் பூர்த்தியாக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் பனாமா நீர் வழங்கல் திட்டம் தண்ணீர் போதாமை காரணமாக 2016 செப்தெம்பர் 30 இலிருந்து பயனற்று இருந்தது. | அவற்றின் மீது செய்யப்பட்ட முதலீடுகள் பயனற்றதாக இருக்கும். | உடன்படுகிறோம். வரட்சிப் பருவத்தில் தண்ணீர் சுத்திகரிப்பு குறைவாக உள்ளதுடன் மாற்றுவழியொன்றினை தேசிய நீர் வழ்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆய்வு செய்கின்றது. | அமுலாக்கல் முகவர் முதலீடு செய்யப்பட்ட நிதிகளின் வினைத்திறனான பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) மிகுதி நிர்மாண வேலைகள் மீதான கிரயத்தை செய்வதற்கு 2016 யூன் 15 இல் கடன் முடிவுறுத்திய பின்னர் 03 ஒபபந்தகாரர்களின் தனிப்பட்ட வங்கி கணக்கிற்கு ரூபா 751.40 மில்லியன் தொகை மாற்றப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், நிர்மாண வேலைகள் ஆரம்ப கட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வேலைகளின் நோக்கெல்லையை கருத்திற்கொள்ளாமல் அமுலாக்கப்பட்டிருந்தது. மேலும், செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மீதான அறிக்கையுடன் ஒப்பந்தகாரரால் செயற்திட்டத்திற்கு மாதாந்த வங்கி கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிகள் மீதான கட்டுப்பாடு நலிவாக உள்ளமையால் ஒப்பந்தகாரரால் நிதிகள் தவறாக பயன்படுத்தும் சாத்தியம் | கடன் காலப்பகுதி கலாவதியானமையால் வங்கி கணக்குகளிற்கு அந்த நிதிகள் மாற்றப்பட்டிருந்தது. வேலைகளின் நோக்கெல்லையின் பிரகாரம் சகல ஒப்பந்தங்களும் செயற்படுத்தப்பட்டன. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொறுப்பின் கீழ் இருந்த அந்த வங்கி கணக்குகள் மீது வங்கி கூற்றின் மாதாந்த கண்காணிப்பு தேவைப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளின் கண்காணிப்பு பொறிமுறை விரயமாக்கல் மற்றும் தவறாக பயன்படுத்தல் என்பவற்றினை தவிர்ப்பதை வலுப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 2010 யூன் 28 ஆந் திகதிய செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் பிரகாரம், ரூபா 990 மிலியன் தொகை மாத்திரம் இலங்கை அரசாங்கத்திடமிருந்தான பங்களிப்பு செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இலங்கை அரசாங்கத்திடமிருந்தான பங்களிப்பு பெறுகைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,281.52 மில்லியன் தொகையாக இருந்தது. | இலங்கை அரசாங்கத்திற்கு மேலதிக செலவினம் ஏற்படும் சாத்தியம் | செயற்திட்ட மதிப்பீடுகள் 02 ஆண்டுகள் பின்னோக்கி தயாரிக்கப்படுவதுடன் செயற்திட்டமானது 2017 இல் பூர்த்தியாக்கப்பட்டது. ஒதுக்கீடு இதன்படி திருத்தப்பட்டது. | -மேற்படி- |

## 3.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்.

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய நிதி அமைச்சின் சுற்றறிக்கைக்காக இலக்கம் 842 இன் தேவைப்பாடுகளுக்கமைய செயற்திட்டத்தினால் நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் முறையற்ற பாவனைக்கான சாத்தியப்பாடு காணப்படுவதுடன், செயற்திட்டத்தின் இறுதியில் சொத்துக்களை ஒப்படைக்கும் போது பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியும் | இனங்குகின்றேன். செயற்திட்டத்திற்காக இருப்புகள் பதிவேடொன்றை பேணுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை இனங்கண்டு நிலையான சொத்துக்களின் பதிவேடு நாளது வரையாக்கப்பட வேண்டும். |